# இயல் : ஆறு

## ஆய்வு முடிவுரை

"இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவங்கள் – ஓர் ஒப்பாய்வு" எனும் இவ்வாய்வு இதுகாரும் ஆய்ந்து மேற்கொண்ட கருத்துக்களின் அடிப்படையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ள ஆய்வின் முடிவுகள்:

இராமலிங்க அடிகளார் சமூகத் தத்துவ கருத்தாக குறிப்பிடுவது மனித சமூகம் உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளில் முதன்மையாக விளங்குவது உணவு ஆகும். அத்தகைய உணவு மனித சமூகத்தில் அனைவருக்கும் எப்போதும் கிடைத்திட வேண்டும். அப்படி கிடைக்காதற்கு காரணம் வறுமை நிலை ஆகும்.

ஒரு சிலர் உடைமையாளராகவும் மற்றொரு சிலர் வறுமையாளராகவும் விளங்க காரணம் சமூக அமைப்பு, சமூக பொருளாதாரம் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் காரணமாக அமைகிறது.

மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்த உதவுவது மனிதனின் உழைப்பு நடவடிக்கை ஆகும். அத்தகைய உழைக்கும் மனிதனின் வறுமை நிலைக்கு சமூக அமைப்பாகிய தொழிலை அடிப்படையாகக் கொண்ட சாதி முறையும், எளியவரை வலியவர் சுரண்டும் முதலாளித்துவ முறையும் மற்றும் மக்கள் நலனை கண்டு கொள்ளாத கருணையில்லா ஆட்சி முறையும் மனிதனின் வறுமை நிலைக்குக் காரணமாக அமைகின்றது என்பதை இராமலிங்க அடிகளின் கருத்தாக அறிய முடிகிறது.

எனவே சாதி அமைப்பு, சமூகப் பொருளாதார அமைப்பு, அரசியலில் மாற்றம் ஏற்பட்டு பொது நோக்கம் ஏற்பட்டால் தான் மனித சமூகத்தின் வறுமைநிலை மாறும் என்பது இராமலிங்க அடிகளாரின் சமூகத் தத்துவ கருத்தாக அறிய முடிகிறது.

மேலும் வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களை முன்னேற்றுவதற்கு உணவு கொடுப்பதே இராமலிங்க அடிகளாரின் ஜீவகாருணிய கொள்கையாகும்.

இதற்காக "சத்திய தரும சாலையை" ஏற்படுத்தி வறுமையால் பாதிக்கபட்ட மக்களின் பசிப்பிணியைப் போக்கினார். இதனால் ஓரளவு பொருளாதார முன்னேற்றநிலை பெரும் மக்கள் தங்கள் வறுமை நிலைக்காக தங்கள் உழைப்பைவிற்காமல் தங்கள் உழைப்பிற்கு உடைமையாளராக மாற்றப்படுகின்றனர் என்பதை அறிய முடிகிறது.

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளர் ஆகி உலகியல் நடத்தல் வேண்டும்"

என்பதே இராமலிங்க அடிகளாரின் சமூகதத்துவ கருத்தாக அமைகிறது.

ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவ கருத்தாக குறிப்பிடுவது பிறப்பின் அடிப்படையில் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்ட மக்களுக்கு தீண்டாமையைப் போக்கும் கருத்தாக ஞானமாகிய (அறிவு) கடலில் இருந்தே இந்த உலகம் உட்பட அனைத்தும் தோன்றி அதிலேயே மறைகிறது. கடலுக்கும் அலைக்கும் உள்ள ஒற்றுமையைப் போல ஒரே முழுமையான அறிவிற்கும், அந்த ஒரே கருவில் இருந்து உருவான இந்த உலகிற்கும் எந்த வேறுபாடும் கிடையாது. அனைத்தும் முழுமையான ஒரே அறிவின் ரூபம் என்பதால் அந்த ஒரே முழுமையான அறிவிற்கு அப்பாற்பட்டு எதுவும் கிடையாது.

எனவே பிறப்பின் அடிப்படையில் சாதிகள் இல்லை என்றும், அந்த அறிவின் உச்சகட்ட வளர்ச்சியாகிய மனிதனை மனிதத் தன்மை என்ற ஒன்றை மட்டும் கொண்டு மனித சாதி என்ற ஒரு சாதியாக மட்டும் பிரிக்க முடியும் என்றும் வேறு வகைகளில் மனிதனை சாதிகளாகப் பிரிக்க முடியாது என்றும் தீண்டாமை ஒழிப்பு கொள்கையாக ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவ கருத்தாக அறிய முடிகிறது.

**ஸ்ரீ நாராயண குருவின்,**

**"ஒரு சாதி ஒரு மதம் ஒரு கடவுள் மனிதனுக்கு**
**ஒரு கரு ஒரு ரூபம் வேற்றுமை இல்லை அதில்"**

**என்ற ஸ்ரீ நாராயனண குருவின் மனித நேயச் சிந்தனையை அறிய முடிகிறது.**

**இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குரு சாதி, சமயம் என்று பிரிந்து கிடக்கும் மக்களை ஒன்றிணைத்து இராமலிங்க அடிகளார் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தையும், ஸ்ரீ நாராயண குரு, ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோக சங்கத்தையும் ( SNDP YOGAM ) ஏற்படுத்திக் கொடுத்து மக்களுக்குச் சங்கம் அமைத்து சக்தி பெறுங்கள் ( UNITY IS STRENGTH ) என்ற தத்துவத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர்.**

**இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் மதக் கொள்கைகளைப் பொருத்தவரை மதம் எதுவானாலும் மனிதன் நல்லவனாக வேண்டும் என்பதாகும்.**

**இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சமய தத்துவங்கள் அதிகாரம் சம்பந்தப்பட்ட சகலவற்றையும் நிராகரித்து சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவதாகும்.**

**உலகில் பல் சமய உண்மைகளை மதிக்கும் விதமாக ஜனநாயகப் பூர்வமாக அவற்றை அங்கீகரிப்பது ஆகும். புரோகித வடிவத்தை கட்டுடைப்பது மற்றும் மக்களை போராட்ட சக்தியாக மாற்றுவது ஆகும்.**

மதங்களின் இலட்சியம் ஒன்று எனவே மதம் ஒன்று என்ற சகிப்புத் தன்மையை ஏற்படுத்துவது. மதத்தின் முக்கிய இலட்சியம் மக்களிடையே அறச் சிந்தனையை வளர்ப்பது ஆகும்.

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் கடவுள் தத்துவத்தைப் பொருத்தவரை கடவுள் ஒருவரே ஆவார். அவர் சச்சிதானந்தமாக இருகிறார். சத் – இருப்பு, சித் – அறிவு, ஆனந்தமாக இருகிறார்.

மேலும் அவர் உலகைப் படைப்பவனாகவும் தன் படைப்பாகவும் விளங்குகின்றார். என்பது இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாரயாண குருவின் கடவுள் தத்துவமாக அறிய முடிகிறது.

எனவே கடவுளின் பெயரால் உயிர் பலி கூடாது, புலால் உண்ணக்கூடாது. போன்ற இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சிந்தனை, ஆன்ம நேய ஒருமைப்பாட்டை வளர்ப்பதாக அமைகிறது.

இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குரு மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு கல்வியின் அவசியத்தை வழியுறுத்துவது குறிப்பிடத்தக்கது. கல்வி அறிவின் மூலம் பகுத்தறிவைப் பெறுவதால் பரந்த உலகை அறிவைக் கொண்டு பார்ப்பதால் மூடப் பழக்க வழங்கங்கள் ஒழிந்து மனிதர்களிடையே ஒற்றுமையுணர்வு ஏற்படுகிறது.

இராமலிங்க அடிகளாரின் ஜீவகாருண்யம் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் கருணை நெறி மனிதனின் தன்னிலையை உடைத்து மற்றமை நோக்கிய நகர்வை ஏற்படுத்துகிறது. எனவே தயவாகிய சமூகப் பண்பே உயிர்களின் இயற்கை நிலை என்பதை அறிய முடிகிறது.

**இராமலிங்க அடிகளாரின் சமூகத் தத்துவம் வறுமையைப் போக்குவதாகவும், ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவம் தீண்டாமையைப் போக்குவதாவும்அமைவதை அறியமுடிகிறது.**

**சாதி, சமய வேறுபாடு அற்ற தீண்டாமை அற்ற, உடமையாளர்,வறுமையாளர் அற்ற ஒரே உலகத்தை உருவாக்குவது இராமலிங்க அடிகளார் மற்றும் ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தத்துவ கருத்துக்களாக அமைகிறது.**